**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 90/2023

நாள் : 20.08.2024

வா.சா.3 திருமதி.புஷ்பவள்ளி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் இராமநாடார் கிரையம் பெற்ற பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். ஆனால் அதில் இந்த தாவா சொத்து எத்தனாவது அயிட்டமாக காட்டப்பட்டுள்து என்ற விவரம் எனக்குத் தெரியாது. எனது தகப்பனார் கிரையம் பெற்ற மொத்த விஸ்தீனம் 1 ஏக்கர் 77 செண்ட் ஆகும். எனது தகப்பனார் சொத்தினை நானும் எனது உடன்பிறந்தவர்களும் 2008ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டோம். நாங்கள் வாய் மொழி மூலமாகத்தான் பாகப்பிரிவினை செய்து கொண்டோம்.

நான் கிரையம் கொடுத்த 17 3/4 செண்டின் வடக்கில் யாருக்கு சொத்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் யாருக்கும் ஒதுக்கீடு செய்யவில்லை அதுவும் எனது சொத்துதான். நான் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்திற்கு கிழக்கிலும், தெற்கிலும், மேற்கே யாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. எங்கள் சொத்தின் ஒரு எல்லையாக இராஜேந்திரன் என்பவர் பெயர் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் எனது சகோதரர் கிடையாது என்றால் சரிதான். அதே போன்று கல்யாணி என்பவரும் என்னுடைய சகோதரரோ, சகோதரியோ கிடையாது.

நானும் எனது சகோதரர்களோ வாய் மொழியாக பிரித்துக்கொண்டு நாங்கள் தனித்தனியாக அனுபவித்துவருவதை காட்டுவதற்கான ஆவணங்களை

நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துடன் கொண்ட மொத்த சொத்தானது என்னுடைய அனுபவத்திலோ, எனது சகோதர சகோதரிகளின் அனுபவத்திலோ இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இராமநாடாருக்கு பாத்தியப்பட்ட கிரைய ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள மொத்த சொத்தில் எல்லா பக்கமும் உலகப்ப நாடார் சொத்து என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராமநாடாருக்கு கிரையம் கொடுத்த சொத்தானது இந்த தாவா சொத்திற்கு தென்புறம் அமைந்துள்ளது என்று சொன்னால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. நான் தாவா சொத்தை வாதிக்கு கிரையம் கொடுக்கும் பொழுது அந்த 17 3/4 செண்ட் குறித்து வில்லங்கம் போட்டுத்தான் கொடுத்தேன். அந்த வில்லங்க சான்றிதழ் வாதி வசம் உள்ளது.

அந்த வில்லங்க சான்றிதழில் உலகப்பநாடார் தனது மனைவியுடன் பாகப்பிரிவினை செய்த விவரமும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 31/2010 வழக்கு நடந்த விவரமோ, அதில் நான் 12 வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள விவரமோ எனக்குத் தெரியாது. நான் வாதியை ஏமாற்றவில்லை என்றும், வழக்கு நடந்த விவரங்களை சொல்லித்தான் நான் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

தற்பொழுதும் தாவா சொத்தானது வாதி ராஜேந்திரன் வசம் இல்லை என்றாலும், அது இன்றைய தேதி வரை பிரதிவாதி முனியாயி வசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி வசம் உள்ளது. வழக்கு நடந்து அந்த வழக்கில் எனக்கு விரோதமாக ஏற்பட்ட சொத்தைதான் நான் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் கொடுத்த பொழுது எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்தால், உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. வில்லங்க சான்றிதழை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் அந்த வில்லங்க சான்றிதழை வாதியிடம் கொடுத்துவிட்டதால், அது பற்றி எனக்குத் தெரியாது.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .